தி இந்து
தமிழால் இணைவோம்
04.06.2024

## வாக்கு எண்ணிக்கையை நேர்மையாக நடத்த வலியுறுத்தி

# மக்கள் இயக்கங்கள் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம்

● **மதுரை**

மக்களவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நேர்மையாக நடைபெறுவதை உறுதிசெய்ய வலியுறுத்தி, மதுரையில் மக்கள் இயக்கங்கள் சார்பில் மெழுகுவர்த்தி ஏந்தி கூடுகை நடத்தப்பட்டது.

மதுரையில் மக்கள் இயக்கங்கள் சார்பில், தேர்தல் ஜனநாயகத்தை காக்கக் கோரி மெழுகுவர்த்தி ஏந்தி மக்கள் கூடுகை நேற்று நடத்தப்பட்டது. மதுரை மாவட்ட நீதிமன்றம் முன்பு நடைபெற்ற கூடுகையில், வழக்கறிஞர் வாஞ்சிநாதன் தலைமையில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

பின்னர் வாஞ்சிநாதன் கூறியதாவது: மக்களவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெறுகிறது. தேர்தலில் பாஜக கூட்டணி 350 இடங்களை பிடிக்கும் என திட்டமிட்டு, கருத்துக்கணிப்பு என்ற பெயரில் திணிக்க முயற்சி நடைபெறுகிறது. 102 ஓய்வுபெற்ற குடிமைப்பணி அதிகாரிகள் வாக்கு எண்ணிக்கை நேர்மையாக நடைபெறுமா? என சந்தேகம் எழுப்பியதுடன், வாக்கு எண்ணிக்கை நேர்மையாக நடைபெறுவதை உறுதி செய்யுமாறு குடியரசு தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளனர்.




↑ மக்களவைத் தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நேர்மையாக நடைபெறுவதை உறுதி செய்ய வலியுறுத்தி மதுரை மாவட்ட நீதிமன்றம் முன் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடத்திய மக்கள் இயக்கத்தினர்.

படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

இதே அச்சத்தை தமிழகத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற நீதிபதிகள் 7 பேர் எழுப்பியுள்ளனர். அவர்களும் குடியரசுத் தலைவர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகள், தேர்தல் ஆணையர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். உள் துறை அமைச்சர் அமித்ஷா 150 மாவட்ட ஆட்சியர்களிடம் பேசி தங்களுக்கு ஆதரவாக வாக்கு எண்ணிக்கை முடிவை அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டதாக, காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது வாக்கு எண்ணிக்கை நேர்மையாக நடைபெறுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பு என போலி செய்திகளை பரப்பி வருகின்றனர். இந்த கருத்து திணிப்பை புறக்கணிக்க வேண்டும். எனவே வாக்கு எண்ணிக்கை நேர்மையாக நடைபெறுவதை தேர்தல் ஆணையமும், உச்ச நீதிமன்றமும் உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.